பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 24 புதன்கிழமை 08.01.2025 கதிர் 062



இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவை தலைவர் பதவியிலிருந்து அகற்றும் அதிகாரம் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு இல்லை ☞ 2

புதிய அரசமைப்பு முயற்சிகள் தொடர்பில்

## ரெலோ, தமிழ் அரசுக் கட்சியுடன் ஜன. 25 தமிழ் காங்கிரஸ் பேச்சு

புதிய அரசமைப்பு தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ரெலோவுடன் ஜனவரி 25 சந்தித்துப் பேச முடிவு செய்யப்பட்டிருப்பதாக தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனையும் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனையும் சந்தித்துப் பேசிய பின்னர் கஜேந்திரகுமார் இதனைத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள சந்திப்புக்கு தமது சார்பில் யார் யாரை அழைத்து வருவது என்பது அவர்களின் முடிவு என்றும் அவர் தெரிவித்தார். ☞ 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கினால் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் வரும்

ரெலோ தலைவர் இப்படி அரசுக்கு ஆலோசனை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கினால் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மத்திய ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடர்பான சபைஒத்திவைப்புபிரேரணைமீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக ஒழிக்கப்படவேண்டும் . அப்போதுதான் வெளிநாட்டிலுள்ள இலங்கைத்தமிழர்கள் இங்கு முதலீடு செய்வார்கள்.

கடந்தகாலங்களில் முதலீடுகளைச் செய்தவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தப்பட்ட சூழலே காணப்படுகிறது. ஆகவே பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு ☞ 2

## குற்றவியல் சட்டத்தை திருத்த அமைச்சரவையில் ஒப்புதல்

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சந்தேகநபரை அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரை சிறப்புச் ☞ 2

## ஒரே சீன கொள்கையை தொடர அமைச்சரவை அனுமதி கிடைத்தது

'ஒரேசீனகொள்கையை' ஆளும்தரப்புத் தொடர்ந்தும் பின்பற்றுவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

சீனப் பெரு நிலப்பரப்பில் இருந்து பிரிந்துள்ள தாய்வான் தீவு தன்னைத் தனியொரு நாடாக அறிவித்து வருகின்றது. ஆனால் சீனாவோ அது தனது ☞ 2 நாட்டின் ஒரு பகுதி என்கிறது.

## ஒரு லட்சம் தொன் அரசி இறக்குமதி

இறக்குமதி அனுமதியின்றி அரிசியை இறக்குமதி செய்ய அனுமதித்ததன் பின்னர் நேற்றுப் பிற்பகல் வரை ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கத்திணைக்களப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட தெரிவித்தார். .

இறக்குமதி செய்யப்பட்ட 101,000 ☞ 8

# இந்தியப் பிரதமர் மோடி இந்த ஆண்டு வருவார்

## நாள்கள் குறித்துக் கலந்துரையாடுகின்ற இரு நாடுகளும்

பிரதமர் நரேந்திர மோடி இந்த வருடத்திற்குள் இலங்கைக்கு வருகை தருவார் என்று கொழும்பில் உள்ள இந்திய உயர்ஆணையகம் நேற்ற அறிவித்தது. இருப்பினும், அவரது பயணத் திகதிகள் இன்னும் இரு தரப்பினராலும் முடிவு செய்யப் படவில்லை.

இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜா செய்தியாளர்களிடம், 'இந்தப் பயணத்திற்கான சரியான ☞ 2



## உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான திருத்தச் சட்ட வரைவு வர்த்தமானியில்

2023 உள்ளூராட்சி தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை நீக்கிவிட்டுப் புதிய வேட்பு மனுக்களைக் கோருவதற்கான தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான வர்த்தமானி நேற்றிரவு வெளியிடப்பட்டது.

நின்றுபோன உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்ட வரைவு, அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவுக்கமைய இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவிப்புப்படி, 2023 மார்ச் 9 நடைபெறவிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் ரத்துச் செய்யப்படும்.

அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பில்வைப்பிலிடப்பட்ட ☞ 2



மருத்துவத்துறையில்

## மோசடியை எதிர்க்கும் அதிகாரிகளின் பாதுகாப்புக்கு ஆளும்தரப்பு உறுதி

மருந்துத் துறையில் மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராக செயற்படும் அனைத்து அதிகாரிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் ஆளும் தரப்பு உறுதியாக இருக்கும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கடத்தல்காரர்கள் அல்லது நலன்சார் குழுக்களின் தேவைகளுக்காக அமைச்சோ அல்லது ஆளும்தரப்போ செயற்படாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

''அதிக லாபம் ஈட்டும் தொழிலாக மாறியுள்ள மருந்துத் துறையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் பிழைகளைத் தீர்ப்பதற்கும் திருத்துவதற்கும் வாதிடும் அனைத்து ஊழியர்களையும் ஊக்குவிக்கும் ☞ 2

ஓய்வூதியர்களின் வங்கி வைப்பு மீதான

## நிறுத்திவைப்பு வரியை மீளளிக்க அநுர உத்தரவு

வருமான வரிக்கு கட்டுப்படாத ஒய்வூதியதாரர்களிடமிருந்து அறவிடப்படும் நிறுத்திவைப்பு வரிகளை இலகுவான முறையில் மீள வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கநிதிஅமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

நிதியமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போது அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. கார் இறக்குமதி, தடுப்பு வரி மற்றும் பெறுமதி சேர் வரி (வற்) வசூலிப்பு, டிஜிட்டல் மயமாக்கல் ஆகியன தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் ☞ 8

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்க முயற்சி

பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் இன்று இடம்பெறாவிட்டால் நாடளாவிய ரீதியில் தனியார் பேருந்து வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளதாக மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் (IPPBA) அறிவித்துள்ளது.

வீதி விதிகளை மீறும் பொது போக்குவரத்துபஸ்களைஅடையாளம் காண சீருடைய அணியாத பொலிஸாரைக்கடமையில் ஈடுபடுத்த ஆளும் தரப்பு தீர்மானித்துள்ளதை அவர் கண்டித்தார். தமது ☞ 2

ஆளும்தரப்பைக் கண்டித்து

## தம்புள்ளை ஓட்டோ சாரதிகள் நேற்று எதிர்ப்புப் போராட்டம்

தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி (ஓட்டோ) சாரதிகள் மற்றும் வாடக வாகனச் சாரதிகள் நேற்று ஆளும்தரப்புக்கு எதிராக தம்புள்ளை ☞ 2

## இனி இது .....

என்று உத்தரவிடக்கோரி மருத்துவர் சிவமோகனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று திரும்பப் பெறப்பட்டுவிட்டது.

கட்சியின் மத்திய செயற்குழு டிசெம்பர் 28 வவுனியாவில் கூடவிருந்த நிலையில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்திற்கு முன்னர் இடைக்காலத் தடை வாங்கும் முயற்சியாகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அது சாத்தியப்படவில்லை. அதனால் வவுனியாவில் கூடிய மத்திய செயற்குழு மாவையின் பதவி விலகலை ஏற்று புதிய தலைவராக சிவஞானத்தைத் தெரிவு செய்துமிருந்தது.

இதையடுத்து இந்த விவகாரத்தில் இனி வழக்கைக் கொண்டு நடத்துவதில் பயனில்லை என்று கருதி வழக்கைத் திரும்பப் பெற்றுவிட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. அதேசமயத்தில் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு எதிராக வேறு வழக்குகளைத் தாக்கல் செய்து மத்திய செயற்குழுவைச் செயற்படவிடாமல் முடக்குவதற்கானசதிமுயற்சிகளும்அரங்கேறி வருகின்றன என்று அறியக்கிடைக்கின்றது.

இது தொடர்பாக கட்சியின் பலதரப்பினரும் பல மூத்த ஜனதிபதி சட்டத்தரணிகளுடன் ஆலோசனை கலந்திருக்கின்றனர். அண்மையில் கட்சியின் மத்திய செயற்குழு கட்சி உறுப்பினர்கள் மீது எடுத்த எழுக்காற்று நடவடிக்கைகளை முன்வைத்து, அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க மத்திய குழுவிற்கு அதிகாரமில்லை என்ற வகையில் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்து மத்திய செயற்குழுவிற்குத் தடை வாங்குவதே இதன் நோக்கம்.

இந்த விவகாரம் டிசெம்பர் 28 மத்திய செயற்குழுவிலும் விவாதிக்கப்பட்டது. கட்சி உறுப்பினர்களை நீக்கவோ அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கோ மத்திய செயற்குழுவிற்கு அதிகாரம் இல்லை என்று சிவமோகன் தரப்பினர் கூட்டத்தில் வாதாடியபோது, ஏற்கனவே கட்சி சார்பில் நடத்தப்பட்ட வழக்கு ஒன்றில் நீதிமன்றத் தீர்ப்பில் சொல்லப்பட்டிருந்த விடயங்களைக் குறிப்பிட்டு மத்திய செயற்குழுவிற்கு அந்த அதிகாரம் இருக்கின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விளக்கமளித்திருந்தார். கட்சியின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன ஆளும் தரப்புக்குத் தாவியதை எதிர்த்து கட்சி தாக்கல் செய்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் சொல்லப்பட்டிருந்தவற்றைக் குறிப்பிட்டே சுமந்திரன் விளக்கம் அளித்திருந்தார்.

அதனை ஏற்று அப்போதைக்கு அமைதியாக இருந்தாலும் பின்னர் அது விடயத்தையொட்டி வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். கட்சியின் இப்படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தொடங்கினால் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் சிறீநேசன் ஆகியோருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை நிலுவையில் இருப்பதே இதற்கான காரணம் என்று கூறப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவுக்கு மாறாக இவர்கள் இருவரும் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்தனர். அவருக்காகப் பரப்புரைகளிலும் ஈடுபட்டனர். இது தொடர்பில் அவர்களிடம் கட்சி விளக்கம் கேட்டபடியிருக்கின்றது. இந்த ஒழுக்காற்று நடவடிக்கை எப்போது வேண்டுமானாலும் தீவிரப்படுத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக, அதற்கு முன்னர் மத்திய செயற்குழுவை முடக்கிவிடவேண்டும் என்ற நோக்கத்திலேயே இப்போது காய் நகர்த்தப்படுகின்றது

தமிழ் அரசுக் கட்சி தொடர்பில் இன்னும் எத்தனை வழக்குகள்தான் வைக்கப்படப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்தியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தை நாங்கள் உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்'' என்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, டிசெம்பர் மாத நடுப்பகுதியில் புதுடில்லிக்கு இரண்டுநாள் பயணமாகச் சென்றிருந்தபோது, மோடியை இலங்கைக்கு வருமாறு அழைப்பை விடுத்திருந்தார்.

ஜனாதிபதியாக திசநாயக்க பொறுப்பேற்றவுடன் கொழும்புக்கு வருகை தந்த முதல் வெளிநாட்டு பிரமுகர் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் ஆவார்.

பிரதமர் மோடி 2015 முதல் 2017 வரை இரண்டுமுறை இலங்கைக்கு வருகை தந்தார். இதற்கிடையில், அநுர விரைவில் சீனாவுக்குச் செல்லவுள்ளார். அவர் 2025 ஜனவரி 14 முதல் ஜனவரி 17 வரை சீனாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தில் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாய்வானையும் சேர்த்த சீனா என்பது ஒரே நாடு என்கிற கொள்கையையே இலங்கை இதுவரையில் பின்பற்றி வந்திருக்கின்றது.

அதாவது சீன மக்கள் குடியரசை மட்டுமே சட்டபூர்வமான சீனாவாகவும், தைவானை சீனாவின் மாகாணமாகவும் இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது.

இனிவரும் காலங்களில் இலங்கையின் அதே கொள்கையே பின்பற்றப்படும் என அறலுறவுத்துறை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு திங்கட்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

## தம்புள்ளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தம்புள்ளை முச்சக்கரவண்டிச் சங்கத்தைச் சேர்ந்த சாரதிகள் 6 பேரையும் விடுவிக்கக் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. ஆளும்தரப்பைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரால் சுமத்தப்பட்ட அபத்தமான குற்றச்சாட்டின் கீழ் இந்த 6 சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தம்புள்ளை, சிகிரியா, ஹபரணை ஆகிய இடங்களின் முச்சக்கரவண்டிச் சங்கங்களின் உறுப்பினர்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நவத்தகம பிரதேச சபைக்கான தேசிய மக்கள் சக்தி வேட்பாளரான அரசியல்வாதியைத் தாக்கி கொள்ளையிட்டனர் என்று கைதான 6 சாரதிகள் மீதும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், தம்புள்ளை நகரில் இரண்டு இலத்திரனியல் செயலிகளைப் பயன்படுத்தி வாகனங்களை இயக்கும் இந்த அரசியல்வாதி தொழில் போட்டி காரணமாக பொய்க் குற்றச்சாட்டைப் பதிவு செய்து தமது சாரதிகளைக் கைது செய்துள்ளனர் என்று தம்புள்ளை முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தவும், நகர மையத்தில் உள்ள மறைகாணி (சிசிரிவி) பதிவுகளைச் சரிபார்த்து, அபத்தமான குற்றச்சாட்டுகளில் இருந்து தமது சாரதிகளை விடுவிக்கவும் காவல் மா அதிபர் மற்றும் ஆளும்தரப்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்துகின்றது.

## ரெலோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இதுவரை நாங்கள் மூன்று தரப்பும் தனித்தனியாகச் சந்தித்து வந்த கட்டத்தில் இந்தத் தரப்புக்களை ஒன்றாகச் சந்தித்து இணக்கப்பாட்டை எட்ட எண்ணியுள்ளோம். இந்த மூன்று கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஜனவரி 25 நடக்கவுள்ளது.

இந்தச் சந்திப்பில் அந்தந்தக் கட்சிகள் இந்த முயற்சிக்கு யாரைக் கொண்டுவரவேண்டும் என்று விரும்புகின்றனவோ அவர்களை அழைத்துவரலாம்.

இந்தச் சந்திப்பு ஓர் ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைய வேண்டும். இந்த மூன்று தரப்புகளுக்கும் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய ஆணையை வழங்கியுள்ள நிலையில் அந்த ஆணையை முழுமையாகப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு பொது நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவைப்படும் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் நோக்கோடுதான் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது" - என்றார் கஜேந்திரகுமார்.

# யாழ். நகரில் இளைஞனை தாக்கிய மூவர் நேற்று கைது

யாழ். நகரில் இளைஞர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியவர்களில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபர்கள் எனக் கருதப்படும் மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

தலைமறைவாக இருந்த இவர்கள் யாழ். நகரில் நடமாடத் தொடங்கியுள்ளனர் என்று யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். நகரில் புத்தாண்டுக்கு முன்தினம் இரவு ஒன்றுகூடிய இளைஞர்கள் குழுவினர் முச்சக்கரவண்டியில் சாகசம் காட்டியதுடன் இளைஞர் ஒருவரையும் கடுமையாகத் தாக்கியிருந்தனர். இது தொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இந்தச்சம்பவம் தொடர்பில் வியாழக்கிழமை சந்தேகத்தின் அடிப்படையில் நான்கு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இரண்டு முச்சக்கரவண்டிகளும் கைப்பற்றப்பட்டன. கைதான மூவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 'ஐஸ்' உடன் ஒருவர் தர்மபுரத்தில் கைது

ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் தருமபுரத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 95 மில்லி கிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தர்மபுர போலீஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரைச் சோதனையிட்டபொழுது 'ஐஸ்' போதைப் பொருளும் 12.800 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தி சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று தர்மபுர போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்தார்.

(316)

## குற்றவியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலையில் நீதிமன்றத்தில் நேரில் முற்படுத்தவேண்டிய தேவையை நீக்குவதற்கும், நிபுணத்துவ சாட்சிகளுக்கு தொலைதூரத்தில் இருந்தபடி சாட்சியளிப்பதற்கும் மின்னஞ்சல் அழைப்பாணைகளை வழங்குவதற்கும் ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்துவதற்கு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி 2023ஆ-ம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம் எண் 15ஐத் திருத்துவதற்கான யோசனைக்கு டிசெம்பர் 5 நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு சட்ட மா அதிபர் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சட்ட வரைவை அரசவர்த்தமானியில் வெளியிட்டு, நாடாளுமன்றத்திலும் முன்வைக்க நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை திங்கட்கிழமை அனுமதி வழங்கியது.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளவேண்டும்.

மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தினை மன்னாரில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது.

இது தொடர்பில் ஏற்கனவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எனவே இந்த வளாகத்தினை அமைக்க வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்.

முப்படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் நிலங்களை விடுவிப்பதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார். வன்னியில்தான் கூடுதலான மக்களின் நிலங்கள் முப்படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றை உடனடியாக விடுவிக்கவேண்டும். இதுதொடர்பில் அபிவிருத்திக்குக்குளக் கூட்டத்தில் பேசியுள்ளோம்.

கிழக்கில் வாழைச்சேனையில் மக்களின் விவசாயக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதனைப் பாராட்டுகின்றேன். வன வளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவையே மக்களின் காணிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவர்களினால் தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இந்தியாவிலுள்ள ஈழத்தமிழர்கள் இலங்கை திரும்ப விரும்பும் நிலையில் அவர்கள் கடவுச்சீட்டுக்களை பெறுவதில் சிக்கல் உள்ளது. எனவே அவர்களை கப்பலில் அழைத்து வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

## மோசடியை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்'' என்று கொழும்பு-2இல் உள்ள தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையின் அவசர பரிசோதனையில் கலந்துகொண்ட அவர் தெரிவித்தார்.

அத்துடன் மருந்துகளின் தரம், நிலை, விலை உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கு குழுவாக அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் எனவும் ஜயதிஸ்ஸ மேலும் வலியுறுத்தினார்.

சுகாதாரத் துறையின் அடுத்த ஐந்து ஆண்டுத் தேசியத் தேவைகளுக்கு ஏற்ப, திட்டங்கள், இலக்குகள் மற்றும் நல்ல கண்ணோட்டத்துடன், பல முக்கிய துறைகள் தொடங்கப்பட்டு, இயக்கப்பட்டு, நெறிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

## உள்ளூராட்சிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பணத்தையும் தேர்தல் திணைக்களம் மீளச் செலுத்தவும் இந்தச் சட்டமூலம் வழிவகை செய்கிறது. அதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரும் திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கவேண்டும் எனவும் குறித்த திகதி சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இருந்து 3 மாத காலத்திற்கு இடைப்பட்ட நாளாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் இந்த யோசனையை ஏற்கவில்லை என்று அதன் தலைவர் சரத் விஜித குமார தெரிவித்தார்.

பயணிகள் பேருந்துகளை பரிசோதிக்கும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தனியார் பேருந்து சேவைக்கு பொலிஸார் தேவையற்ற அழுத்தங்களை வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார். இந்த நடவடிக்கைகள் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தில் இருந்தாலும், தனியார் பேருந்துகளால் பல விபத்துக்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

மேலும், முறையான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததை விமர்சித்த அவர், முறையான சாலை அமைப்பு இல்லாததாலேயே

தொடர்ச்சி 7ம் பக்கம்....

# தொல்லியல் திணைக்களத்தால் நடப்பட்ட பதாகையால் பரபரப்பு



வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான் பகுதியில் திங்கட்கிழமை மாலை தொல்லியல் திணைக்களத்தால் நடப்பட்டுள்ள பதாகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

'1 கிலோமீற்றர் வட்டவான் தொல்லியல் நிலையம்' என குறிப்பிட்டு குறித்த பதாகை நடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் இது பெரும் பரபரப்பையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் எவ்வளவு பகுதி தொல்லியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது? அதற்காக வர்த்தமான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா? எதிர்காலத்தில் அப்பகுதியில் புத்த விகாரை வருமா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தொல்லியல் திணைக்களத்தின் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த 28.12.2024 அன்று இரவோடு இரவாக குச்சவெளி பகுதியில் தொல்லியல் திணைக்களத்தால் பதாகை நடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த முதலாம் திகதியன்று மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கிளிநொச்சியில் எலிக்காய்ச்சல் காரணமாக இருவர் உயிரிழப்பு




கிளிநொச்சியில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் இருவர் உயிரிழந்துள்ளார் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தவினோதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

கிளிநொச்சியின் முழங்காவில் மற்றும் கண்டாவளைப் பகுதிகளில் குறித்த இருவரும் உயிரிழந்துள்ளனர். எலிக்காய்ச்சல் நோய்க்காரணி லெப்டோஸ்பிரோசிஸ் பக்டீரியாவாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

கால்நடைகளின் சிறுநீருடன் நீர் கலந்திருக்கும் பகுதிகளில் மனிதர்கள் நடமாடும் போது தோலில் ஏற்பட்டுள்ள வெடிப்புகள் அல்லது காயங்கள் ஊடாக குறித்த கிருமி பரவுவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இதன் அறிகுறிகளாக கடுமையான காய்ச்சல், தலைவலி, கண் சிவப்பாக இருத்தல், உடல் நோவு, தசை நோவு, வயிற்று நோவு, இருமல், மூச்சு எடுத்தலில் சிரமம் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

எனவே காய்ச்சல் ஏற்பட்டாலும் இவ்வாறான அறிகுறிகள் காணப்பட்டாலும் உடனடியாக வைத்திய பரிசோதனை செய்து கொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டார்

இதைவிட தற்போதைய பனியுடனான காலநிலையில் சளி அதிகரித்து நிமோனியா போன்ற காய்ச்சலும் ஏற்பட வாய்ப்புண்டு அதனைவிட மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளது. இதிலும் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

# அடகு நகைகளை மீட்க சென்றவர் போலி நாணயத்தாளுடன் கைது

5000 ரூபா போலி நாணயத்தாளுடன் அடகு நகை மீட்கச்சென்ற சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கியில் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த வங்கியில் இருந்து சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 29 வயதுடைய சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டதுடன் போலி 5000 ரூபா நாணயத்தாளும் மீட்கப்பட்டன.

குறித்த சந்தேக நபர் ஏற்கனவே அடகு வைத்த நகையை மீட்பதற்காக போலி 5000 ரூபா நாணயத்தாளை வங்கிக்குள் எடுத்து சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதுடன் குறித்த வங்கியில் நாணயத்தாள்களை பரிசோதனை செய்த போது போலி நாணயத்தாள் என்பதும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைதான சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபரின் தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு கஞ்சா கடத்திய இரண்டு பேர் கைது

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு திங்கட்கிழமை மோட்டர் சைக்கிளில் கஞ்சா கடத்தியதாக பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்த மோட்டர் சைக்கிள் ஒன்றில் இருந்து 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அதில் பயணித்த 36 வயதுடைய பெண் ஒருவரும், அவரது சகோதரர் எனக் கூறப்படும் 30 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து இரண்டு லட்சத்து 72 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஓமந்தைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# தேயிலை களஞ்சியசாலைகளில் சோதனை; மனிதப் பாவனைக்குதவாத தூள்கள் மீட்பு

உடுநுவர, தவுலகல ஹன்டெஸ்ஸ பிரதேசத்திலுள்ள தேயிலை களஞ்சிய சாலைகளில் மனித பாவனைக்குதவாத 12000 கிலோ கிராம் நிறைகொண்ட தேயிலை தூள்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கம்பளை முகாம் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அனுமதியின்றி இரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த குறித்த கழிவுத் தேயிலை தூள் 426 பொலித்தின் பைகளில் பொதியிடப்பட்டிருந்துள்ளது.

கம்பளை விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நளின் உதாரம்பவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த களஞ்சியசாலைகளில் சோதனையிடப்பட்டுள்ளது.

தவுலகல, வெலம்பொட, வடதெனிய, ஹன்டெஸ்ஸ, வீமகஹகொடுவ, பூவலிகட உள்ளிட்ட உடுநுவர பிரதேசத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் பல வருடங்களாக இந்த கழிவு தேயிலை வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதனால் சிலோன் டீயின் பெயருக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தொழிற்சாலைகளில் இருந்து அகற்றப்படும் கழிவு தேயிலையை கொண்டு வந்து சீனி, தேன், சாம்பல், சுண்ணாம்பு உள்ளிட்ட பல்வேறு இரசாயனங்களை பயன்படுத்தி கறுப்பு தேயிலை தயாரித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்தைக்கு விற்கப்படுகின்றது.

இந்த தேயிலை கையிருப்புடன் அதன் உரிமையாளரும் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தவுலகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கம்பளை விஷேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி நளின் உதாரம்ப பொலிஸ் பரிசோதகர் கே.டி. விக்ரமரத்ன மற்றும் அதிகாரிகள் குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பின்வாங்கக்கூடாது

'தூய சிறீலங்கா' செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆளும்தரப்புக்கு எதிரான கோபதாபங்களைக் கிளறும் அறிகுறிகள் தெரிகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் போக்குவரத்துவிதிகளைஒழுங்குபடுத்துவதில்காவல்துறையினர் காட்டும் தீவிரம் ஏற்கனவே உரசல்களை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கின்றது. இது தொடர்பில் அதிகாரிகளோடு இன்று நடத்த இருக்கும் பேச்சுக்கள் வெற்றிபெறத் தவறினால் வேலை நிறுத்தத்தில் குதிப்போம் என்று மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஏற்கனவே அறிவித்திருக்கின்றது.

இந்த உரசல்கள் மேல் மாகாணத்தில்தான் அதிகம் ஏற்பட்டுள்ளன என்று தெரிகிறது. போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள மேல் மாகாணத்தில் சீர்செய்வதற்கான தேவைகள் அதிகம் உள்ளதால் உரசல்கள் தவிர்க்க முடியாதவைதான். 'தூய சிறீலங்கா' செயற்றிட்டம் முன்னெடுக்கப்படத் தொடங்கியதை அடுத்து ஒரு தனியார் பேருந்து சாரதியும் நடத்துனரும் பயணிகளை நடுவழியில் 'அம்போ' என்று விட்டுவிட்டுச் சென்றுள்ளது.

மொரட்டுவை பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 'வழித்தடம் 100' பாணந்துறை – புறக்கோட்டை சேவையில் ஈடுபடும் பேருந்து ஒன்றே இவ்வாறு செய்துள்ளது. அந்த வாகன உரிமையாளர், சாரதி மற்றும் நடத்துனருக்கு எதிராக மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை இப்போது நடவடிக்கை எடுத்துள்ளது. தை மாதம் 15 வரை சாரதி மற்றும் நடத்துனரின் சேவையை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சாரதிக்கு 2,500 ரூபாவும் நடத்துனருக்கு 750 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், குறித்த இருவரும் வேறு பேருந்தில் பணிபுரிந்தால் குறித்த பேருந்தின் வீதி அனுமதிப்பத்திரம் நீக்கப்படும் எனவும் மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த இருவரையும் தை 21 பயிற்சி ஒன்றுக்கு அழைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், குறித்த பேருந்தின் வீதி அனுமதிப்பத்திரத்தை தை மாதம் 10 வரை இடைநிறுத்தவும் மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தகைய இறுக்கமான நடவடிக்கை காரணமாகவே தற்போது தனியார் பேருந்து உரிமையாளர்கள் போர்க்கொடி தூக்க முயற்சிக்கிறார்கள். அதற்கு ஆளும்தரப்பு இடம்கொடாமல் இருப்பது அவசியம். இலங்கை போக்குவரத்து விதிமுறைகளை மிக மோசமாக செயற்படும் சாரதிகளைக் கொண்ட நாடு. விதிகளைமதிப்பது தமது கடமை என்று உணராக சாரதிகளும் விதி மீறுவதைத் தமது அசாத்திய துணிச்சல் அல்லது நாயகத்தனம் (ஹீரோயிசம்) என்று கருதும் சாதிகளும் இங்கு அதிகம் இருக்கிறார்கள். விபத்துக்களுக்கும் உயிரிழப்புக்களுக்கும் இது காரணமாக இருக்கும்போது, இதனைத் தடுத்து நிறுத்த மிக இறுக்கமான நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம். இது விடயத்தில் ஆளும் தரப்பின் அணுகுமுறை சரியானதே.

போக்குவரத்து விதிகளை மதிக்கும் சாரதிகளும் விதிகளை அனுசரித்து தமது வருமானத்தைப் பெறவேண்டும் என்று நினைக்கும் வாகன உரிமையாளர்களும் உருவாகத வரை விபத்துக்களால் வருடாந்தம் இலங்கையில் ஏற்படும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களும் பல ஆயிரம் பேருக்கு ஏற்படும் காயங்களும் தவிர்க்க முடியாதவையாகிவிடும். இதற்கு எங்காவது முடிவு கட்டப்பட்டேயாகவேண்டும். அதற்கான நல்ல முயற்சியைத் தொடங்கியிருக்கும் ஆளும்தரப்பு எதிர்ப்புக்களைக் கண்டு பின்வாங்கிவிடக்கூடாது. இது விடயத்தில் மிகத் தீவிரமாகத் தொடர்ந்தும் செயற்பட்டு போக்குவரத்து விதிகளைப் பேணும் சாரதிகளைக் கொண்ட நாடாக இலங்கையை மாற்ற வேண்டும். பேருந்துச் சாரதிகளுக்கு மட்டமன்றி உந்துருளிகளின் (மோட்டார் சைக்கிள்) சாரதிகளுக்கும் இந்த இறுக்கமான அணுகுமுறையை பின்பற்றதுவதும் அவசியம்.

## அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது

இன்று காலை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் அன்னபூரணி மண்டபத்தில் அதன் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் நடைபெற்ற மேற்படி நிகழ்வு மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து அம்மையாரின் திருவுருவப்படம் தாங்கியசிறப்பு ஊர்வலத்தை தொடர்ந்து அம்மையாரின் நினைவாலய வழிபாடு, உருவச்சிலைக்கான மரியாதையளித்தில்தொடர்ந்து மண்டப நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின

ஆசியுரைகளை மாவைஆதீனம் முதல்வர் மகாராஜஸ்ரீ ச. இரத்தினசபாபதிக் குருக்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் பிரதமகுரு சிவஸ்ரீ. சு. செந்தில்ராஜக் குருக்கள் நல்லை ஆதீனம் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கஇயதோடுபிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார்

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ,வலி-வடக்கு பிரதேச செயலர் திருமதி. சிவகெங்கா சுதீஸனர் கலந்துகொண்டார் விசேட நிகழ்வாக கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நூற்றாண்டு மலர் வெளியீட்டு வைக்கப்பட முதற்பிரதி பெறுபவர் தெல்லிப்பளை. தேவஸ்தானம் தர்மகர்த்தா சபைத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சிர்த்தார்த்தன் பெற்றுக்கொண்டார்

தொடர்ந்து பிறந்தநாள் அறநிதியம் அன்பளிப்பி வழங்கல் கல்விநிதியம் : பெறுபவர் தெல்லிப்பழை கோட்டக்கல்லிப் பணிப்பாளர் வே.அரசகேசரி மருத்துவ நிதியம் தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, பெறுபவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைஅத்தியட்சகர்வைத்தியகலாநிதி ஏ. தேவநேசன் வழங்கி வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் புத்திஜிவிகள் பேராசியர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# அனைத்து இன மக்களும் ஒன்றாகச் செயற்பட்டால் இலங்கையை உலகிலேயே மிளிர வைக்க முடியும்

## சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவிப்பு

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒன்றாக செயற்பட்டால் இலங்கையை உலகில் மிளிரும் நாடாக மாற்றியமைக்க முடியும் என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.



சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சர்வமத தலைவர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு வருகைதந்து, அங்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் உலமாக்களுடன் கலந்துரையாடியதுடன் துஆ பிராத்தனைகளிலும் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை அனைத்து இனத்தவர்களும் ஒன்றாக இணைந்து வாழும் சௌபாக்கியமான நாடு. அதனை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதன் தேவைப்பாடு குறித்து பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் மத குருமார்களுடன் கலந்துரையாடினோம்.

குறிப்பாக கிளீன் சிறிலங்கா வேலைத் திட்ட மூலம் ஆன்மிக மற்றும் சிந்தனை ரீதியான மாற்றம் ஏற்படுவதற்கான வழி செய்யப்பட வேண்டும் என்ற மிகவும் ஆர்வத்துடன் இவர்கள் இருக்கின்றனர்.

மனிதர்கள் என்றவகையில் நாங்கள் மிகவும் முன்னேற்றமடைந்த தேசமாக மாறுவதற்கு எமது உள்ளக முன்னேற்றம் சமூக முன்னேற்றம் மற்றும் ஆன்மிக ரீதியான முன்னேற்றம் அத்தியாவசியமாகும். அவ்வானதொரு முன்னேற்றமே எமது தேவைப்பாடாகும்.

அதன் பிரகாரம் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக செயற்பட்டால், இலங்கையை உலகில் மிளிரும் நாடாக மாற்றியமைக்க முடியும். - என்றார்.

# பாடசாலையின் முன்பாக திரண்ட பெற்றோர்கள் பதற்றமான சூழ்நிலையால் பொலிஸார் விரைவு

(பர்வீஸ்)

பாடசாலை அதிபரின் நடவடிக்கைகளை எதிர்த்து பெற்றோர்கள் பாடசாலை முன்னால் திரண்டனர். இதனால் அங்கு பதட்டமான சூழல் காணப்பட்டது.







சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட கமு/சது இஸ்மாயில் வித்தியாலயத்தில் அதிபரின் நடவடிக்கைகளை எதிர்த்து பெற்றோர்கள் பாடசாலை முன்னால் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில் ஒன்று கூடினர். இதனால் அங்கு பதட்டமான சூழல் ஏற்பட்டது.

இதன்போது, குறித்த இடத்திற்கு வருகைதந்த சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர் பெற்றோர்கள் ஒன்றுகூடியதற்கான காரணங்களை கேட்டறிந்து சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளரிடம் எடுத்துக் கூறினார்.

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் பீஎம்.வை. அறபாத் மற்றும் சம்மாந்துறை கோட்டக் கல்வி பணிப்பாளர் என்.எம். நாசிர் அலி ஆகியோர் குறித்த பாடசாலைக்கு முன்னால் ஒன்றுகூடிய பெற்றோர்களுடன் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இப்பிரச்சினை சம்பந்தமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை வலயக்கல்வி அலுவலக அதிகாரிகளால் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, பாடசாலை முன்னால் ஒன்றுகூடிய பெற்றோர்கள் அமைதியாக கலைந்து சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 5 ஆயிரம் பாடசாலைப் பைகளை நன்கொடையாக வழங்கிய சீனா

நாட்டின் ஆரம்பநிலைக் கல்வியைத் தொடரும் பிள்ளைகளுக்கான கிராமிய அபிவிருத்திக்கான அறக்கட்டளை மற்றும் அலிபாபா நிறுவனத்தின் உதவியுடன் பாண்டா பேக் வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய 5,000 பாடசாலை பைகள் அடங்கிய நன்கொடை செவ்வாய்க்கிழமை பிரதமர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொக்கினால் குறித்த பாடசாலை பைகள் கல்வி மற்றும் உயர் கல்வி பிரதியமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்னவிடம்





நன்கொடையின் அடையாளமாகக் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்ரி, கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வியமைச்சின் செயலாளர் நாலக கலுவெள உள்ளிட்ட அதிகாரிகளும் கிராமிய அபிவிருத்திக்கான சீன அறக்கட்டளையின் உதவிப் பணிப்பாளரும் பங்கேற்றிருந்தார்கள்.

# அரச நிதிக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமனம்!



அரச நிதிக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

புதிய வருடத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்றுக் காலை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கையாக சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெற்றது.

அதன்போதே அரசாங்க நிதிக்குழுவுக்கு பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுள்ளதாக சபாநாயகர் சபைக்கு அறிவிப்பு செய்தார்.

அதற்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் ராசமாணிக்கம், சதுரங்க அபேசிங்க, கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன, அர்கம் இல்யாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அரசாங்க நிதிக் குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சிவத்தமிழ் செல்வி நூற்றாண்டு விழாவை சிந்தையில் வைப்போம்!

மகாதேவஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .. ஆஸ்திரேலியா

பக்தி என்னும் கருவினை எந்த மொழியும் இலக்கியம் ஆக்கியதே இல்லை. ஆனால் பக்தியை உயர் வாக்கிப் பார்த்து அதனை இலக்கியமாய் காட்டிய பெருமை எங்கள் அன்னைத் தமிழ் மொழிக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. ‘ பக்தி இலக்கியம் ‘ என் று ஒரு பெரும் பகுதியை தமிழ் மொழியானது தன்னுடை இலக்கிய வரலாற்றில் கொண்டிருக்கிறது என்பதும் முக்கியம் எனலாம். பக்தி இலக்கியம் என்னும் பெரு வெளியில் ஆண்களும் வருகிறார்கள். பெண்களும் வருகிறார்கள். பக்தி இலக்கியப் பாதையில் முகிழ்த்த பாடல்கள் அத்தனையும் - இறையருளைப் பற்றியன வாக இருந்த பொழுதும் ; அவை அத்தனையும் அன் னைத் தமிழின் அழகோவியமாய் , அருங்கருத்துக்களை அட க்கியவனாவாய் , இலக்கியச் சுவைகளை ஈவதாய் , புலவர்க்கெல்லாம் நல்விரு ந்தாய் , தமிழுக்கே பெரும் பொக்கிஷமாய் வாய்த்த நல் வரமென்றே எண்ண வேண்டி இருக்கிறது. அந்தப் பக்தி இலக்கிய வெளியிலே காலத்துக்காலம் ஆண்டவன் அருளால் பல அருளாளர்கள் வந்து இணைகிறார்கள். அந்தவகையில் ஈழத்தில் நல்லை நகரில் நாவலர் பெருமான் வருகின்றார். அவரின் அடிபற்றி எங்கள் சைவத்தின் கொழுந்து ,சைவ வழி பற்றிட வருகி ன்றார் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

காரைக்கால் அம்மையார் , திலகவதியார் , மங்கையற்கரசியார் , வழியில் பயணப்பட வந்தமைகின் றவராய் எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களைப் பார்க்கின்றோம். முன்னவர்கள் வாழ்ந்த காலமும் , சூழலும் வேறாகும். அதனால் அவர்களின் செயற் பாடுகளும் அக்காலத்துக்கு இயைபானதாக ஆகியிருந்தது. ஆனா ல் தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்கள் வாழ்ந்த காலமும் , சூழலும் - அவரின் செயற்படுகின்ற பாங்கினைத் தீர்மானித்தது என் பதை மனமிருத்துவது முக்கியமாகும்

சாதாரண குடும்பத்தில் சாதாரண பிள்ளையாகவேதான் தங்க ம்மா அவர்கள் பிறக்கிறார்கள். அவர் பிற க்கும் வேளை எந்தவொரு அதிசயங்களோ , அற்புதங்களோ நிகழவில்லை. சாதாரணமாகவே பிறந்தார். சாதாரணமாகவே படித்தார். சாதாரண மாகவே ஒரு ஆசிரியர் வேலையும் பார்த்தார். ஆனால் அவர் மற்ற வர்களைப்போல் ‘சாதாரணமானவர் அல்ல, சாதிக்கப் பிறந்த சன்மார்க்க நங்கை ‘ என்பதை இறைவன் ஏற்கனவே அவரின் பிறப்பிலே எழுதி வைத்துவிட்டான் என்பதுதான் யதார்த்தமாகும். இப்படியானவர்க ளைத்தான் ‘ கருவிலே திருவுடையார் ‘ , ‘ வரம் பெற்று வந்தவர் ‘,என்று வியந்து நிற்கிறார்கள் போலும். வரம் பெற்று வந்த காரணத்தால் , தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் - தம் காலத்தில் செய்ய வேண்டிய சிறப்பான அத்தனையும் செய்து பயன் மிக்கவராய் ஒளிவிட்டு நின்றார் என்றால் அஃது மிகை யாகாது.

தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களைப் பல பரிணாமங்களில் பார்ப்பதுதான் உகந்ததாகும். சைவத்தை நன்கு கற்று சைவப் புல வர் ஆகுகின்றார். தமிழை முறையாகக் கற்று தமிழ்ப் பண்டிதர் ஆகுகின்றார். அத்துடன் ஆசிரிய பயிற்சியையும் பெற்று நல்லா சிரியராகவும் மிளிர்கிறார்.

இலங்கையின் பல பகுதிகளில் கற்பித்து யாவரையும் நன்கு அறிந்தும் கொள்ளுகின்றார். கற்பிக்கும் வேளை கருத்தூன்றிக் கற்பித்து கற்கின்றவர்கள் மனத்தில் நற்கருத்துக்களையும் ஊன்றுகின்றார். வேலை பார்த்த இடமெல்லாம் வேலையெனக் கருதா மல் அதனை ஆத்மார்த்தப் பணியாக அகமிருத்தி மேற் கொள்ளுகின்றார். ஆசியரியப்பணியை அகமிருக்கும் அழுக்குகளை அகற் றிடும் பணியாகவே எண்ணிச் செயற்படுகின்றார். இதனால் அன்னையாய் , அறிவூட்டும் ஆசானாய் மதிக்கவும்படுகிறார் என்பதை மன மிருத்துவது அவசியமாகும்.

அழகானவர் தங்கம்மா அவர்கள். அறிவானவர் தங்கம்மா அவ ர்கள். இளமையில் அவரைப் பார்த்த வர்கள் அவர் வசம் ஈர்க்கவேபடுவார்கள். சாதாரண பெண்தானே அவரும். ஆனால் அவர் மனத்தில் லௌகீகம் பற்றிய சிந்தனைக்கே இடம் இல்லாமல் போய் விடுகிறது. அவர் சிந்தனை எல்லாம் - சைவம் பற்றியும் , சன்மார் க்கம் பற்றியும் , சமூகம் பற்றியுமே சென்று விடுகிறது. இல்லறத் தில் தங்கம்மா அவர் கள் இணைந்திருந்தால் - சாதாரண ஒரு குடும்பத் தலைவியாய் , பிள்ளைச் செல்வங்களுடன் வாழும் நிலைதான் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவரிடம் எழுந்த அரிய சிந்தனையால் - அனைவருக்கும் அன்னை யாய் , அநேக குழந் தைகளின் வழிகாட்டியாய் , சமுதாயத்தின் சேவகியாய் , சைவத்தின் காவலராய் , தமிழ் பெரும் ஆளுமையாய் ,யவரும் விய ந்து பார்த்து வாழும் வாய்ப்பு வாய்த்தது என்பதை எவருமே மறுத்துரைத்து விடல் முடியாது.

தெல்லிப்பளையில் பிறந்தவர்தான் தங்கம்மா அவர்கள். அவ ரின் முன்வினைப் பயனாகவேதான் சாதா ரண சிறிய கோவிலான துர்க்கை அம்மன்



கோவில் தென்படுகிறது. அந்தத் துர்க்கை அம் மாதான் எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மாவின் வாழ்வினையே மாற்றப் போகிறது என்பதை எவருமே எதிர்பார்க்கவே இல்லை. ஏன் .. தங்கம்மா அவர்களே எதிர்பார்த்திருக்கவும் மாட்டார். இதைத்தான் திருவருள் என்று எண் ணத் தோன்றுகிறது. தெல்லி ப்பளையில் பிறந்தவரின் சமய , சமூக , ஆன்மீக , அறப்பணிகள் , தமிழ்ப்ப ணிகள் , அத்தனையும் ஆரம்பிக்கும் இடமாக அன்னை துர்க்கையின் ஆலயமே நிலைக்களனாக அமை கிறது ,அமைந்தது

என்பதை அனைவரும் அகமிருத்துவது மிக மிக அவசியமாகும். சாதாரண தமிழ்ப்பண்டிதர் , சைவப் புலவர் , பயிற்றப்பட்ட ஆசிரி யர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ‘ துர்க்கா துரந்தரி ‘என்று போற்றப்படுவதற்கும் நிலைக்களனே தெல்லிப்பளையில் சாதாரணமாய் இருந்த துர்க்கை அம்பாளின் சிறிய கோவிலே ஆகும். தங்கம்மா அவர்கள் துர்க்கை அம்பாள் கோவிலைக் கண் டதுதான் அவரின் வாழ்வில் மிகப்பெரிய தருணம் , மிகப்பெரிய திருப்பு முனை என்று எண்ண முடிகிறதல்லவா !

நாவலரை நன்றாகவே மனத்தில் பதித்திருக்கிறார் தங்கம்மா அவர்கள். அதனால் அவரின் தடம் பற்றி நடக்க முற்பட்டிருக்கி றார்.



நாவலர் பெருமானின் பின்னர் - புராணங்கள் , திருமுறை கள் ,சைவசமயச் சிந்தனைகளைக் கோவில்களில் யாவரும் கேட்டிடப் பிரசங்கம் செய்யும் பாங்கு இல்லாமல் போய்விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அத்தகைய சூழலில் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அந்தப் பணியை ஆத்மார்த்தமாய் அகமி ருத்தி ஆலயங்கள் தோறும் இடைவிடாமல் பிரசங்களை அழகு தமிழால் தக்க எடுத்துக் காட்டுக்களுடன் மிகவும் பக்குவமாய் செய்தமை மீண்டும் நாவலர் யுகம் தோன்றி விட்டதோ என்றே எண்ணிட வைத்தது. தங்கம்மா அவர்களின் சைவப் பிரசங்கங் கள் இலங்கையில் எல்லாக் கோவில்களிலும் இடைவிடாது இடம் பெற்றன. இலங்கை மட்டும் அல்லாது - இந்தியா , மலேசியா , சிங்கப்பூர் , இங்கிலாந்து நாடுகளிலும் அவரின் பிரசங்கங் கள் இடம் பெற்றன என்பதை மனமிருத்துவது அவசியமாகும்.

பேச்சுடன் நின்று விடாமல் எழுத்திலும் தன்னுடைய ஆளுமை யினைப் பதித்தும் நின்றார். ‘ கந்த புராணச் சொற்பொழிவுகள் ‘ நூல் மிகவும் கருத்தாளம் மிக்க நூல். இந்த நூலின் பெறுமதியை வியந்து பாராட்டி இலங்கை அரசாங்கம் 1978 ஆம் ஆண்டு ‘ சாகித்திய மண்டல விருதினை ‘ வழங்கியது.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சைவசமயத் தொண்டினை யும் சொற்பெருக்காற்றும் ஆற்றலையும் வியந்து மதுரை ஆதீனத் தால் ‘ செஞ்சொற் செம்மணி ‘ பட்டம் வழங்கப்பட்டது. காரைந கர் மணிவாசக சபையினால் ‘ சிவத்தமிழ் செல்வி ‘ , தமிழ்நாடு இராகேசரி பீடாதிபதியினால் ‘ சைவதரிசினி ‘ , சிலாங் கூர் மலே சியா இலங்கைச் சைவச் சங்கத்தினால் ‘திருவாசகக் கொண்டல்’ ,வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தினால் ‘திருமுறைச் செல்வி ‘ , ஈழத்துச் சிவனடியார் கூட்டத்தால்

காலைக்கதிர் Kalaikkathir

## சிவத்தமிழ் ...

4ம் பக்கத் தொடர்ச்சி..........

' சிவமயச் செல்வி' அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் ' சிவஞான வித்தகர் ' , ' தெய்வத் திருமகள் ' ஆகிய இரண்டு விருதுகள் , துர்க்காதேவி தேவஸ்தானத்தால் ' துர்க்கா துரந்தரி ' , மாதகல் நுணைசை முரு கமூர்த்தி த ' செஞ்சொற்கொண்டல்', இணுவில்பரராசசேகரப் பிள்ளையார் தேவஸ்த்தானத்தினால் ' திரு மொழி அரசி ' கொழும்புக் கம்பன் கழத்தால் ' கம்பன் புகழ் விருது ' , என எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நாடிப் பட்டங்கள் வந்து குவிந்தன. அம்மா அவர் களுக்கு பட்டங்களை வழங் கிய அமைப்புகள் அத்தனையும் - பட்டங்களை வழங்கியதால் பெரும் பேற்றினைப் பெற்றதாகவே எண் ணிக் கொண்டன என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களுக்குப் பல பட்ட ங்கள் வந்து அமை ந்தாலும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தால் வழங்கப்பட்ட ' சிவ த்தமிழ் செல்வி ' என்னும் பட்டந்தான் மிகவும் சிறப்பானதாய் ஒளி விட்டு விளங்கியது எனலாம். தங்கம்மா என்றால்

' சிவத்தமிழ் செல்வி ' என்றே அனைவர் அகத்திலும் பதிந்து விட்டது என்பதை எவருமே மறுத்துரைக்க மாட்டார்கள். சிவ மயமாய் சிந்தித்து , சைவத்தைக் காத்திடும் அன்னையாய் , காலத்தின் வருகையாய் , ஏன் காலத்தின் காவலராய் , விள ங்கினார் என்பதுதான் உண்மையாகும்.

அம்மா அவர்கள் தன்காலத்தில் சைவத்தின் குரலாகவே ஓங்கி ஒலித்தார். சைவத்தின் வளர்ச்சியை இளையவர் விளங்கிடவும் , சைவ நம்பிக்கை தளர்ந்தவர் நிமிர்ந்திடவும் , துணிவாய் அதே வேளை மிகவும் பக்குவமாய் யாவரும் பக்குவத்தைப் பெறும் வண்ணம் பல வற்றை ஆற்றினார். பலருக்கும் நல் வழிகாட்டி யாகவும் விளங்கினார்.

ஆன்மீகம் என்பது ஆலய வழிபாட்டுடன் மட்டும் நின்று விடுவதி ல்லை. ஆன்மீகம் என்பது அறம் சார்ந் ததாகும் என்று அம்மா அவ ர்கள் வாழ்ந்து காட்டினார்கள். புராணங்கள்படிப்பதும், திருமுறைகளைப் போற்றுவதும் , திருக்கோவில்களை வழிபடுவதும் , நற் சிந்தனைகளக் கேட்பதும் , அத்தியாவசியம் என்று அம்மா அவர் கள் கூறினார்கள். அதே வேளை ஆதரவற்றோரைக் காப்பதும் , பசிப்பிணி போக் குவதும் , கல்விக்கண்ணைத் திறப்பதும் , நலத்தி னைக்காக்க வழி வகுப்பதும் அவசியமானது என் பதையும் எங்கள் தங்கம்மா அவர்கள் எடுத்து உரைத்தார். உரைத்தோடு நின்று விடாமல் - தானே முன் வந்து ' துர்க்காபுரம் மகளிர் இல்லம் ' என்னும் அமைப்பினை நிறுவினார். ' அன்னபூரணி அன்னதான மண்டபத்தை ' அமைத்தார். அத்துடன் அமையாது ' கல்யாண மண்டம் ' ஒன்றையும் அமைத்தார்கள். குறைந்த செலவில் கல் யாணங்களை நடத்துவதற்கு அதாவது வசதிகள் குறைந்தோரும் இல்லறமாம் நல்லறத்தில் இணைந்து இன்பமுற - அம்மாவின் இம்முயற்சி பெரும்பயனை அளித்தது எனலாம். இவை அத்தனை யும் ஆன்மீகமே என்பதை நாமனைவரும் மனமிருத்துவது மிக மிக அவசியமாகும்.

எங்கள் தமிழ்ச் செல்வி யாழ் மண்ணின் மாசில்லா மங்கை, சைவத்தின் காவலர் , சன்மார்க்க வழி காட்டி , செந்தமிழ்ப் புலவர் சிறப்புடை ஆசானுக்கு - அமெரிக்க ஹவாய் சிவாய சுப்பிரமணிய சுவாமி ஆசிரிமம் 2005 ஆம் ஆண்டுக்கான ' சிறந்த இந்துப் பணி ' விருதும், . 2003 இல் வவுனியாவில் இடம் பெற்ற தமிழ் இலக்கி யப் பெருவிழாவில் ' வட கிழக்கு மாகாண ஆளுனர் விருதும் ' வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாது இலங்கை அரசாங்கத்தால் ' கலாசூரி ' விருதும் வழங்கப்பட்டது. அம்மா அவர்களின் அனை த்துப் பணிகளையும் கருத்தில் கொண்டு கல்வி நிலையில் , கற் பித்தல் நிலையில் உயர்ந்தோங்கிநிற்பது என்று எல்லோர் மனத்திலும் இடம் பெற்றிருக்கின்ற பல்கலைக்கழகமானது அதாவது யாழ் மண்ணில் பொன்னம்பலம் இராமநாதப் பெரியோனின் கனவாய் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கமாய் பேருருப் பெற்ற பல்கலைகழகம் எங்கள் சிவத்தமிழ்ச் செல்விக்கு ' கலாநிதிப் பட் டத்தினை ' வழங்கி கௌரவப்படுத்தியது. இந்தப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கியதால் யாழ்ப்பா ணப்பல்கலை க்கழகமே பெரும் பேற்றினைப் பெற்றுக் கொண்டது எனலாம்.

சைவத்தின் காவலராய் , தமிழ் மொழியின் ஆளுமையாய் , எங்கள் நாவலர் பெருமான் திகழ்ந்தார். அவரின் தடம்பற்றி நடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களும் - சைவத்தையும் தமிழையும் கண்ணா கவே கருதினார். நாவலர் பெருமான் சமயப்பணி யோடு சமுகப்பணியினையும் மேற்கொண்டார். அம்மா வும் அவ்வழியில் பயணப்பட்டார் என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

நாவலர் பெருமானைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். அவர் நடந்த மண்ணில் நடந்தும் இருக்கி றோம்.அவரின் ஆற்றல்களை அவரின் வரலாற்றால் அறிந்தும் இருக்கிறோம். அவர் இம்மண்ணில் வாழ் ந்த காலத்தில் நாம் பிறக்கும் பாக்கியம் எமக்கெல் லாம் வாய்க்கவில்லை. ஆனால் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலத்தில் நாமெல்லோரும் வாழ்ந்தோம் ,அவருடன் பழகினோம் , அவரின் சொற்பொழிவுகளைக் கேட்டோம் ,அவரின் ஆன்மீகப் பணிகளை அறப்பணிகளை , கண்டோம் வியந்தோம் என்பதே பெரும் பேறு என்றுதான் எண்ண வேண்டும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பா க்குட்டி அவர் களுக்குப் பின் அவரைப்போல் ஒரு ஆன்மீக , அறச்சிந்தனை மிக்க அருள் நிறைப் பெண் மணி யாழ்மண்ணுக்கு வாய்க்கவே இல்லை என்பதை எவருமே மறுத்து உரைத்திடல் முடியாது.

சைவத்தின் வழிநடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்கள் ஆண்டவன் அருள் பெற்ற அருளாளர். அவ ரின் நூற்றாண்டு விழா என்பது சைவத்துக்கும் , தமிழுக்கும் நடக்கும் பெருவிழா என்றுதான் எண்ண வைக்கிறது அல்லவா ! சைவத் தமிழ் வரலாற்றில் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என் னும் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவது மிக மிக அவசியமானதாகும். அவருக்கு பல நூற் றாண்டுகள் கடந்தும் விழாக்கள் நடத்துவதுதான் சைவர்கள் , தமிழர்கள் , தலையாய பணியாகும் !

## நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்பில் ஆராய குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானம்

### சபாநாயகர் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தொடர்பில் ஆராய குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளார் என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா முன்வைத்த ஒழுங்குப்பிரச்சினை, மற்றும்எதிர்க்கட்சிகளின்பிரதமகொறடாவான கயந்த கருணாதிலக்க முன்வைத்த கருத்து தொடர்பில்பதிலளிக்கையிலேயேசபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா , எனக்கு சபையில் உரையாற்ற நேரம் ஒதுக்கப்ப டுவதில்லை. டிசெம்பர் 18ஆம் திகதி எனது சிறப்புரிமை மீறல் சம்பந்தமாக சபாநா யகரிடம் கூறியுள்ளேன். ஆனால் இன்று வரையில் அதற்கு பதிலளிக்கப் படவில்லை. ஜனவரி 7ஆம் திகதியான இன்று வரையில் உரையாற்றஎனக்குநேரம்ஒதுக்கப்படவில்லை.

நான் நாடாளுமன்றத்திற்கு வந்து பயனில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து நான் வருகின்றேன். ஆனால் எனக்கு இதில் எந்த பயனும்இல்லை. இங்குவந்துமேலேபார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீட்டுக்கு போக முடியாது. ஆகவே எனக்கு பதில் வழங்குங்கள். - என்றார்.

சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர், இவ்விடயம் தொடர்பான பதிலை வழங்குவதற்கான யோச னையை எதிர்க்கட்சித்தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளோம். - என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க, எதிர்க்கட்சி குழுவினரும் எதிர்க்கட்சித் தலைவ ரும் சபாநாயகரை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும் போது இந்த விடயம் தொடர்பிலும் கலந்துரையாடினோம்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் நாங்கள் உங்களின் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம். எழுத்து மூலமும் உங்களிடம் இது தொடரபில் குறிப்பிட்டுள்ளோம் என சபாநாயகரிடம் தெரிவித்தார்.

மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து எழுந்த அர்ச்சுனா நாடாளுமன்றத்திற்குள் எனக்கு உரையாற்றுவதற்கே நேரம் எதிர்க்கட்சியால் ஒதுக்கப்படவில்லை என்றால் எப்படி நாங்கள் ஒன்றாக நாட்டை கொண்டு செல்லப் போகின்றோம் என்று எதிர்பார்க்க முடியும் எனக் கேள்வி எழுப்பினார்.

இதனைத் தொடர்ந்து சபாநாயகர் எதிர்க்கட்சி பிரதம கொறடாவால் முன்வைக்கப்பட்ட விடயத்துக் கமையநாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்பில் ஆராய குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். குழுவின் அறிக்கைக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். - என்றார்.

## திருநெல்வேலி உணவகத்திற்கு 70,000 ரூபா தண்டம் விதிப்பு

திருநெல்வேலியில் சுகாதாரக்கேடான முறையில் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் மற்றும் அவரது குழுவினர் கடந்த மாதம் 26.12.2024 அன்று திருநெல்வேலி பகுதியில் வழமையான உணவக பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள ஓர் உணவகத்தில் உணவு தயாரிப்பதற்காக திகதி காலாவதியான பொருள்கள், வண்டு மொய்த்த பொருள்கள் மற்றும் சுட்டுத்துண்டு எதுவும் இல்லாத பொருள்கள் பயன்படுத்துவது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து குறித்த பொருள்களை கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர் குறித்த உணவக உரிமையாளரிற்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை வழக்கு தாக்கல் செய்தார்.

வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்ட மேலதிக நீதிவான் லெனின்குமார், உணவக உரிமையாளரிற்கு 70 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## தனியார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருந்துகள் சாலை விதிமீறல்களில் தொடர்புபடுவதாகஅவர்தெரிவித்தார். குறிப்பாக நகரங்களில்பேருந்து நிறுத்த வசதிகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை, மேலும்சுகாதார வசதிகள் அல்லது ஓட்டுநர்களுக்கான ஓய்வறைகள் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

'புதன்கிழமைக்கு (இன்று) முன்னர் போக்குவரத்து அமைச்சக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்படவேண்டும். இல்லையேல் போராட்டத்தில் குதிப்போம்' என்று அவர் கூறினார்.

## நிறுத்திவைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்பட்டன.

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி மற்றும் பொருளாதார முன்னுரிமைகளை கருத்திற்கொண்டு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க வலியுறுத்தினார்.

வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்காக பெறுமதிசேர்வரி(ருபுவீ)வசூல்செயல்முறையை டிஜிட்டல் மயமாக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வரி இணக்கம் மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்கான விரிவான டிஜிட்டல் முறைமையைவிரைவில்நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின்பொருளாதாரமுன்னேற்றம் குறித்து நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி, நாடு மீண்டுவரும் அதேவேளையில் படிப்படியாக உறுதிப்பாட்டைச்செல்வதாகவும்தெரிவித்தார். தற்போதைய சவால்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு வழங்கப்படும் நன்மைகளை அதிகரிக்க ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் வலியுறுத்தினார்.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ ஆகியோரும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெற்றிக் தொன் அரிசியில் 40,000 மெற்றிக் தொன்சிவப்புஅரிசியும்61,000மெற்றிக்தொன் புழுங்கல் அரிசியும் உள்ளடங்குவதாகவும், தற்போது இறக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அரிசியும்விரைவில்விடுவிக்கப்படும்என்றும் அருக்கொட தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் அரிசி நெருக்கடிக்குத் தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஜனவரி 10 வரை ஆளும்தரப்பு அனுமதித்துள்ளது. டிசெம்பர் 4 முதல் இந்த அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

# அனுமதிப் பத்திரம் இன்றி மணல் கடத்தியவர் கைது

(பாறுக் ஷிஹான்)

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தில் மணல் கடத்திய சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்வத்தை பகுதியில்நேற்று(செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக மணல் கடத்திய சந்தேக நபர் உட்பட மணல் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளனர்.



மேலும் இதன் போது 28 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் கைது செய்யப்பட்டதோடு குறித்த உழவு இயந்திரம் அனுமதிப்பத்திரம் இல்லாமல்மணல்ஏற்றுவது பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது .மல்வத்தை பகுதியைச் சேர்ந்த கைதான சந்தேக நபரிடமிருந்து மணல் மீட்கப்பட்டிருப்பதுடன் சந்தேகநபர்மற்றும்உழவுஇயந்திரம் உள்ளிட்ட சான்றுப்பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறைபொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப் பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல்தடுப்புபிரிவு பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரனதுங்க தலைமையில் பொலிஸ் குழுவினர் இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்.



## நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்ரனின் முயற்சியால் கொழும்பு - யாழிற்கு மேலதிகமாக இரு தொடருந்து சேவை



கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கு மேலதிகமாக இரு ரயில் சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நீண்டகாலமாக யாழ் - கொழும்பிற்கு ஒரேயொரு தொடருந்து சேவை மட்டும் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருந்தனர். இந்நிலையில் இது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் பொதுமக்களால் என்னிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இதுதொடர்பாக ஆராய்ந்திருந்ததுடன், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

எனது வேண்டுகோளிற்கு அமைவாக 15 ஆம் திகதியில் இருந்து ஒரு தொடருந்து சேவையும், 31 ஆம் திகதியில் இருந்து பிறிதொரு சேவையும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

# புதுவருட அன்பளிப்பும் ரீ சேட் வழங்கி வைப்பும்

### கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில்

(அபு அலா)

புதுவருடத்தையொட்டி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு புதுவருட அன்பளிப்புடன் அமைச்சின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ சேட் வழங்கி வைக்கும் நிகழ்வு அன்மையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.பி.மதநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளிட்ட அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.பி.மதநாயக்கவால் புதுவருட அன்பளிப்பும் அமைச்சின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ சேட்டையும் வழங்கி வைத்தார்.



# வவுனியாவில் 113 பேருக்கு டெங்கு நோய்த் தாக்கம்

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு 113 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மழை காலங்களில் மழை நீரானது டெங்கு நுளம்பு பெருக்கும் வகையில் தேங்கி நிற்காமல் இருப்பதற்காக சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை 113 பேர் வவுனியாவில் டெங்கு நோயால் பாதிப்படைந்தனர். அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 82 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. 100



காலைக்கதிர் Kalaikkathir

# ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பின் தேசிய மாநாடும் கௌரவிப்பும்

(அபு அலா, முபீன்)

’குடும்ப கட்டமைப்பைப் பேணுபவளே ஆற்றலுள்ள ஆளுமைப் பெண்’ எனும் தொனிப்பொருளில் ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு நடத்திய முஸ்லிம் பெண்கள் ஆளுமைகளின் 4 ஆவது தேசிய மாநாடு திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை ஜுபிலி மண்டபத்தில் இடம்பெற்றது.

இலக்கிய வித்தகரும், அமைப்பின் தலைவியுமான சம்மாந்துறை மீறா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.எம்.நஸீர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம்.பைஷல் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவனீதன் விஷேட அதிதியாகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைச் சேர்ந்த ஏ.எச்.எம்.அஸ்ரப் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும், கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், திருகோணமலை ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் எம்.எம்.எம்.முஹைஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ’பெண்ணெனும் பேராறு’ என்ற தலைப்பில் சிறந்த கவியரங்கு ஒன்றும், அவரின் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற்றதுடன் ’குடும்ப கட்டமைப்பைப் பேணும் ஆற்றலுள்ள ஆளுமைப் பெண்கள் பலர் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.








முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# பூட்சிற்றி முகாமையாளர்கள் இருவருக்கு ரூ. 90,000 தண்டம்

பாவனைக்குதவாதஉணவுப்பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக கோண்டாவிலில் உள்ள பூட்சிற்றிகள் இரண்டிற்கு 90 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

கோண்டாவில் பொது சுகாதார பரிசோதகர் க. ஜெகானந்தனிற்கு கோண்டாவில் பகுதிகளில் உள்ள பூட்சிற்றிகளில் வண்டு மொய்த்த, திகதி காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தன்







அவர்களின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும், க. ஜெகானந்தன் தலைமையிலான குழுவினரால் குறித்த பூட்சிற்றிகள் 18.12.2024 தினம் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது திகதி காலாவதியான பொருள்கள், வண்டு மொய்த்த பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த இரு பூட்சிற்றிகள் இனங்காணப்பட்டன.

குறித்த பொருள்களை கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர் க. ஜெகானந்தன், பூட்சிற்றி முகாமையாளர்களிற்கு எதிராக திங்கட்கிழமை வழக்கு தாக்கல் செய்தார். வழக்கை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிவான் முகாமையாளர்களிற்கு 60 ஆயிரம் ரூபா, 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்ததுடன் கடுமையான எச்சரிக்கையையும் வழங்கினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2025இல் வெளியிடப்பெற்றது